[1979 ஏப்ரல் 26

ஏற்கெனவே சிலபேர் குடியிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அவர்கள் அங்கே விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை வீட்டு வசதி வாரியம் பெற்று அங்கே வீடு கட்டுவதற்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டிருக்கிறேன். அவர் தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ஆகவே செயற்குறிப்பு இருக்கின்றது. 132 வாடகை வீடுகள் கட்டுவதற்கு வீட்டுவசதி வாரியத்திடம் செயற் குறிப்பு இருக்கின்றது. அவர்கள் அது குறித்து அரசுக்கு அனுப்பு வார்கள்.

தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்கு ரோந்துக் காவல் படை.

* வினா எண். 834—திரு. ரா. மார்க்கபந்து, திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புக்கென தனி போலீஸ் ரோந்துப் படை அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அது எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுகிறது?

(இ) மற்ற மாவட்டங்களுக்கு அதை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

(ஈ) இதற்கு மத்திய—மாநில அரசுகளின் பங்கு என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) தீண்டாமை ஒழிப்புக்கென தனி போலீஸ் ரோந்து படை அமைக் கப்பட்டுள்ளது.

(ஆ) அது தற்போது கோயம்புத்தூர், மதுரை, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுகிறது.

(இ) இந்த ரோந்து படையினை பிற மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தும் உத்தேசம் உண்டு.

(ஈ) ஏற்கெனவே இயங்கி வரும் ஆறு ரோந்து காவல் படைகளுக்கு ஆகும் செலவை மாநில அரசே ஏற்கிறது.

புதிதாக மேலும் செங்கல்பட்டு, இராமநாதபுரம், கன்னியா குமரி, வட ஆற்காடு, நீலகிரி, சேலம், தர்மபுரி ஆகிய 7 மாவட்டங்களில் அமைக்கப்படவிருக்கும் ரோந்து காவல் படை ளுக்கு ஆகும் செலவினை மத்திய அரசே முழுவதுமாக ஏற்றுக் கொண்டு இதனை ஒரு மத்திய அரசின் திட்டமாக (Centrally sponsored scheme) அமுல்படுத்த மத்திய அரசு 21-8-1978 அன்று சம்மதித்து இத்திட்டத்திற்காக 1978-1979-ம் ஆண்டில் நான்கு இலட்சம் ரூபாய் கொடுக்க ஒப்பு தலளித்துள்ளது.''

1979 ஏப்ரல் 26]

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இது வரைக்கும் இந்தத் தீண்டாமை ஒழிப்பு சட்டத்தின்கீழ் எத்தனை வழக்குகள் நிருபிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகள் தோற்றுவிட்டிருந்தால் எந்த அடிப்படையில் அவைகள் தோற்று விட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

அத்துடன் எந்தவிதமான procedure has been adopted in trying these cases என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே 31–8–78 வரை அறிவிக்கப்பட்ட வழக்குகள் 7,434, பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 7,137. தண்டனை கொடுக்கப் பட்ட வழக்குகள் எண்ணிக்கை, 3956 ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையில் வழக்குகள் நடத்தப் படுகின்றன. என்ன 'ப்ரொஸிஜர்' என்று கேட்டிருக்கிறார்கள். அவர் வழக்கறிஞர். அதைப் பற்றி நன்கு தெரிந்திருப்பார்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போது ஹோட்டல்களில் காலில் செருப்பு போட்டுக்கொண்டும், தோளில் துண்டு போட்டுக்கொண்டும், கிராமங்களில் போகமுடியாத நிலை இருப்பது சர்வ சாதாரணம். அது ஒரு அசிங்கமான நிகழ்ச்சி, வெட்கப்பட வேண்டிய ஒன்று. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு வழக்குப் பதிவு செய்தாலும், அதன்மீது சாட்சியம் சொல்வ தற்கு அனுமதிக்கப்படாமல், வெளியேற்றப் படுகிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று உடனடியாக எப். ஐ. ஆர். ரிப்போர்ட் கொடுத்தாலும் அதைப் பதிவு செய்வதில்லை. இதற்கு ஒரு தனி போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கே போய் பதிவு செய்துகொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அது நியாயம் அல்ல. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் ; தலைவர் அவர்களே, ஒவ்வொரு காவல் துறையிலும் வழக்குகளைப் பதிவு செய்வதில் சில நேரங்களில் குறைபாடு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஆகவே தனி ரோந்து படையை அமைத்தால் இந்த வழக்குகளை தீவிரப்படுத்தவும், உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், சாத்தியக்கூறு இருக்கும் என்பதால் அரசாங்கம் இந்த நடை முறையைப் பின்பற்றுவதற்கு இன்றைக்கு தனி கவனம் செலுத்தி வழக்குகள் பதிவு செய்யப்படுகிறது. அவர்களுக்கு அக்கறை இருக்கும் என்ற காரணத்தால் இந்த தனி படை நிறுவப்பட் டிருக்கிறது. நிதி நிலைக்கு ஏற்ப பிற்காலத்தில் அது பரிசீலிக்கப் படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, காவல் துறையினர் மத்தியில் பல அதிகாரிகள் இன்று 'ஆன்டி-அரிசன்' என்ற முறையில் ஒரு பிரீஜிடிஸ்—ஆக இருக்கிறார்கள். ஆகவே. பொதுக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கும் பிரச்னை வந்த போது அந்தப் போலீஸ்காரர்கள் 'லாண்ட்-லார்ட்ஸ்' பக்கத்தில் இருப்பதனால் இன்றைக்கு பல 'இன்சிடென்ஸ்' நடந்துகொண்டிருக்கின்றன. நேற்று வந்த தந்தி ஒன்றை உங்கள் அனுமதியோடு படிக்கிறேன். விருதுநகர் மாரிமுத்து நாடார் என்பவர் "Virudhunagar Marimuthu Nadar having orchards at Pavali near Virudhunagar obstructs the way to burial ground (Stop) Police is acting biased and started brutal attack, on the Harijans (Stop pray intervention and order." ஆகவே இப்படி அன்றாட பிரச்னையாக வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, போலீஸ் மத்தியில் இருக்கக் கூடிய இந்தக் 'காஸ்ட்—பிரிஜிடிஸ்' 'கன்ட்ரோல்' பண்ணுவதற்கும் குறைப்பதற்கும், அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு இதுபோன்ற தகவல்கள் வந்த வுடனே, அரசு விசாரித்து அறிந்து, சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுபோன்று காவலர்கள் தவறு செய்யும்போது அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்கின்ற ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு தண்டனை பெற்றிருக்கிறார்கள்? அதுபோல் குறிப்பாக' எனது ஊருக்குப் பக்கத்தில் இருக்கும் எனக்குத் தெரிந்த அரிசன குடிமகன் ஒருவர் பொதுக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்த காரணத்தால், அவர் அந்த ஊரில் இருந்து துரத்தி, துரத்தி அடிக்கப்பட்டு, பிறகு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்ய போனபோது, அந்த வழக்கைப் பதிவு செய்யவில்லை. அந்தக் காவல் துறையினர் அவர்களைப் புறக்கணித்திருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசு வேறு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் கால தாமதமாக வந்தார் என்று கருதுகிறேன். ஏற்கெனவே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது, மொத்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டவை. 7,434, தண்டனை வழங்கப்பட்டது 3,956 என்று சொல்லியிருக்கிறேன். இப்போது இருக்கிற சட்டப்படி அந்த வழக்குகளை 'காம்பவுன்ட்' பண்ணும் முறை பின்பற்றுவதில்லை.

1979 ஏப்ரல் 26]

(முற்பகல் 9.30)

ஆகவே வழக்கு கண்டிப்பாக போட வேண்டும் என்று தான் விதிமுறை இருக்கிறது. இதைப்பற்றி தனியாக எழுதித் தந்தால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கனவே இது போன்ற வழக்குகளை போலீஸ் ஸ்டேஷன்களில பதிவு செய்வதற்கு தயங்குகிறார்கள். இதற்கென்று தனியாக விசேஷ போலீஸ் படை இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆனால் இது காக்னஸபிள் அஃபன்ஸ் - ஸாக இருப்பதால் எந்த போலீஸ் ஸ்டேஷனிலும் வழக்கை பதிவு செய்யலாம். விசேஷ போலீஸ் படை என்பது எங்கேயோ ஒரு மையத்தில் இருக்கிறது. அங்கே போய் பதிவு செய்யும் போது டிலே ஆகிறது. இதனால் கேஸ் விடுதலையாவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும் இது போன்ற வழக்குகளை பதிவு செய்யவேண்டும் என்று கண்டிப்பாக அரசு ஒரு உத்தரவு பிறப்பிக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இப்போது நடைமுறையில் இதுபோன்ற வழக்கு களை போலீஸ ஸ்டேஷன்களிலும் பதிவு செய்கிறார்கள். இப்படிப்பட்ட வழக்குகளில் தீவிரம் காட்டவேண்டும் என்பதற் காகவும், தனியாக அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற் காகவும் தனிக்காவல் படை செயல்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிக்க எத்தனை விசேஷ போலீஸ் படையைப் போட்டும் தீண்டாமையை ஒழிக்க முடியவில்லை. மேலும் மேலும் வளர்ந்துகொண்டு தான் வருகிறது, தீண்டாமை இங்கு இருக்கிறது என்று ஏதாவது ஒரு இடத்தில் வழக்கு போடும் போது அங்குள்ள, உயர்ந்த ஜாதிக்காரர்கள் இங்கு தீண்டாமை கிடையாது என்று போலி ரிப்போர்ட்டை கொடுத்து விடுகிறார்கள். ஆகவே நமது அமைச்சர் அவர்கள் இதை ஒழிக்க தனி முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். தீண்டாமை குற்றத் திற்காக தூக்குத் தண்டனை கொடுக்க அரசு தனிச்சட்டம் கொண்டு வரவேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னதான் சட்டம் இயற்றினாலும், எவ்வளவு தான் காவல்படை போட்டாலும்' சமுதாயத்தில் மனமாற்றம் ஏற்பட்டு இன ஒற்றுமை ஏற்பட்டால்தான் இந்த தீண்டாமை ஒழிக்க முடியும். இந்த உணர்வுகள் சமுதாயத்தில் ஏற்பட வேண்டும்

இதை ஒழிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூக்கு தண்டனை கொடுப்பதற்கு சட்டம் இயற்றப்படுமா என்று கேட்டார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் மிகவும் ஜாக்கிரதை யாக இருக்கவேண்டும். பாதுகாப்புடனும் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : அமைச்சர் அவர்கள் பதில் அளித்த திலிருந்து 3,000 வழக்குகள் தோற்று விட்டிருப்பதாக தெரிகிறது. எந்த அடிப்படையில் இவை தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன என்ப தற்கு ஏதாவது குறிப்புகள் இருக்கிறதா? * Untouchability Act has been misused, என்கிற தகவல் ஏதாவது அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : எந்த அடிப் படையில் இந்த வழக்குகள் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் இருக்கிறதா என்று கேட்டார்கள், நீதிவழங்கப் பட்டதின் அடிப்படையில் தான் இந்த வழக்குகள் தோற்கடிக்கப் பட்டிருக்கலாம். இதர விவரங்கள் இங்கே இல்லை.

ஊட்டியில் அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்திற்கு ஏற்பட்ட பொருட்சேதம்.

*வினா எண். 835— திரு. வ. மு. சுப்பிரமணியம் ; மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 4-11-78 அன்று ஊட்டியில் பெய்த பெருமழையின் காரணமாக அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக்கழகத்திற்கு ஏற்பட்ட பொருள் சேதத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) இதுபற்றி அரசுக்கு தெரிவிக்கப்பட்டதா?

(இ) மதிப்பீட்டுக்குரிய பொருள்கள் அத்தனையும் வெள் ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) 4-11-78 அன்று, ஊட்டியில் பெய்த பெருமழையின் காரணமாக தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சி கழகத்திற்கு ஏற்பட்ட பொருள் சேதத்தின் மதிப்பீடு ரூ. 63,881/ ஆகும்.

(ஆ) இதுபற்றி அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.

(இ) மதிப்பீட்டுக்குரிய பொருள்கள் அத்தனையும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டது.